**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**<u>அ.வ.எண். 348/2020</u>**

**நாள்– 08.07.2025**
**வா.சா. 1 – திரு. <u>எல். ராமசாமி</u>**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

1) மேற்படி வழக்கை நானும் எனது தம்பியும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய தம்பி நல்ல உடல் நலத்துடன் நடமாடும் நிலையில் உள்ளாரா என்றால் உள்ளார். என்னுடைய தம்பிக்கும் சேர்த்து சாட்சி சொல்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நூறாண்டுகளாக கோவில் தர்மகர்த்தாவாக நாங்கள் இருப்பதாகக் கூறும் நிலையில் அவர்களின் பெயர்கள் என்னவென்றால் எனக்கு முன்பு என்னுடைய தகப்பனார் லட்சுமணன், அவரின் சகோதரர் குப்புசாமி, அவரின் தகப்பனார் ரங்கசாமிக் கவுண்டர், அவரின் தகப்பனார் இராமையாக் கவுண்டர், அவரின் தகப்பனார் ரங்கையாக் கவுண்டர், அவரது தகப்பனார் அம்மாசைக் கவுண்டர் ஆகியோராவர். மேற்படி குறிப்பிடப்பட்ட நபர்கள் கோவில் தர்மகர்த்தாவாக இருந்ததற்கு ஆவணங்கள் இருக்கிறதா அதைத் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குப்புசாமி என்பவர் பெயரில் கோவில் மின் இணைப்பு உள்ளது, அந்த இரசீது வா.சா.ஆ.18 ஆகும். நான் சொல்வதுபோல் தர்மகர்த்தாக்கள் இருந்ததற்கான ஆவணங்கள் ஏதுமில்லை என்றாலும் வழக்கிற்காகப் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) ரங்கையாக் கவுண்டர் தன்னுடைய சொந்த செலவில் கோவிலைக் கட்டியதற்கான ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் ஊரில் எங்கள் ஜாதியைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்கள் உள்ளன. பிற ஜாதியைச் சேர்ந்த குடும்பங்கள் சுமார் 25 இருக்கும். நான் அவ்வாறு வழக்கிற்காகப் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. ரங்கையாக் கவுண்டர் காலத்தில் ரங்கையாக் கவுண்டரால் ஸ்தாபிக்கப்பட்டு அவரது குடும்பத்தினரால் வழிபாடு செய்யப்பட்ட வகையில் இந்தக் கோயில் ரங்கையாக் கவுண்டர் குடும்பக் கோவில் என்று வழக்கிற்காகப் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு கோவில் இருப்பதாக கூறுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தொட்டிய நாயக்கர்களுக்கு மற்றும் போயர்களுக்கு தனித்தனி கோவில்கள் உள்ளன. வேட்டுவக்

கவுண்டர்களுக்கு என தனிக் கோவில் உள்ளது என்று வழக்குரையில் கூறப்பட்டிருந்தால் அது பொய்யென்றால் சரியல்ல.

3) ஆதியில் எங்கள் ஊரில் எங்கள் ஜாதியினர் மட்டும் இருந்தோம் என்றும் பிற்காலத்தில் போயர் சமுதாயத்தினர் குடியேறினார்கள் என்றும் நான் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆதியில் எங்கள் ஊரில் மற்ற சமுதாயத்தினரும் எங்கள் சமுதாயத்தினருக்கு முன்பே இருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய குலதெய்வங்கள் கலியனூர் கிராமத்திலுள்ள காளியம்மன் மற்றும் வெண்ணந்தூர் அருகிலுள்ள ஒலைப்பட்டி அங்காள பரமேஸ்வரி ஆகும். கலியனூர் கிராமம் எலந்தகுட்டைக்கும் பள்ளிபாளையத்திற்கும் இடையில் உள்ள கிராமம் என்றால் சரியல்ல. பள்ளிபாளையத்திலிருந்து எலந்தகுட்டை சுமார் 7,8 கிலோ மீட்டர் தொலைவிலும், கலியனூர் கிராமம் சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. கலியனூர் கிராமம் பள்ளிபாளையத்திலிருந்து சுமார் 1 1/2 கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

4) எங்கள் சமுதாயத்திற்கு மற்றொரு அரசு வேம்பு விநாயகர் கோவில் ரங்கனூரில் எங்களது கட்டுப்பாட்டில் தர்மகர்த்தா என்ற முறையில் உள்ளது. 1900 வருடத்திற்கு முன்பிருந்தே தாவாக் கோவிலின் நான்கு திசைகளிலும் உள்ள நிலங்கள் எங்கள் பங்காளிகளுக்குச் சொந்தமாக இருந்து வருகிறது என்றால் இராமையக் கவுண்டர் (எ) இராமக் கவுண்டர், வருதப்ப கவுண்டர், ஆறுமுகக் கவுண்டர், செங்கோட கவுண்டர் ஆகியோருக்குச் சொந்தமாக இருந்து வருகிறது. அதற்குண்டான ஆவணங்களை தாவாவில் தாக்கல் செய்யவில்லை. தற்போது மேற்குப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு எனது பெயரிலும் எனது தம்பியின் பெயரிலும் எனது தாயார் பெயரிலும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்துக்களைச் சுற்றி உள்ள அனைத்து நிலங்களும் அரசு புறம்போக்கு நிலங்கள் என்றால் சரியல்ல அது கிராம நத்த நிலம். பொதுமக்கள் பூஜை காரணங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள எங்கள் பங்காளிகள் கோவில் நிர்வாகஸ்தர்கள் என்ற முறையில் கோவில் கிழபுறமாக உள்ள காவல் தெய்வம் உள்ள இடத்தினை விட்டுள்ளதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை அது எங்கள் அனுபவத்திலுள்ள கிராம நத்த நிலம் என்பதால் ஆவணங்கள் இல்லை. எங்கள் அனுபவத்தில் மேற்படி இடம் உள்ளதற்கான ஆவணங்கள் எதுவுமில்லை. மேற்படி இடம் அரசுப் புறம்போக்கு இடம்

என்றாலும் வழக்கிற்காகப் பொய்யாக எங்களுடைய அனுபவத்திலுள்ள இடமென்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்குறிப்பிட்ட இடம் இன்றளவும் காலியிடமாகத் தான் உள்ளது. கோவிலுக்கு எந்த பக்கம் பொங்கல் வைப்போம் என்றால் வடக்குத் திசையில் வைப்போம். எங்கள் பங்காளிகள் வடக்குத் திசையிலும் மற்றவர்கள் கிழக்குத் திசையிலும் வைப்பார்கள். மற்றவர்கள் கிழக்குத் திசையில் பொங்கல் வைப்பதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் அனைவரும் வடக்குத் திசையில் தான் பொங்கல் வைப்பார்கள் என்றாலும் சரியல்ல.

6) 1930–ம் ஆண்டு தாவாக் கோவில் இராம கவுண்டர் மகன் ரங்கசாமிக் கவுண்டர் ஒரு கல் மண்டபம் கட்டியதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை, அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல 1963–64, 1973–74 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் மற்றும் முன்மண்டபம் கட்டப்பட்டது அதன் அனைத்து நிர்வாக வேலைகளும் பங்காளிகளால் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் உண்டா என்றால் இல்லை, அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) ஒரு கவுண்டர் குடும்பத்திற்கும் ஒரு தொட்டிய நாயக்கர் கோசங்கி குடும்பத்திற்கும் உள்ள தனிப்பட்ட மன வருத்தம் என்னவென்றால் இளைஞர் மன்றத்தில் ஏற்பட்ட கருத்துவேறுபாடாகும். மேற்படி குறிப்பிடப்பட்ட குடும்பங்கள் முறையே எங்கள் குடும்பம் மற்றும் ஒரு இராஜேந்திரன் குடும்பம் ஆகும். மேற்படி எங்கள் தனிப்பட்ட பிரச்சனையை ஊர்ப்பிரச்சனை மற்றும் ஜாதிப் பிரச்சனையாக மாற்றிவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனைக்குப் பின்புதான் எங்கள் சமுதாயத்தினர் பிரதிவாதி சமுதாயத்தினரை கோவிலுக்குள் அனுமதிக்காமல் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல.

8) திருச்செங்கோடு தாசில்தார் அவர்கள் இருதரப்பினரையும் பல தேதிகளில் விசாரித்தார்கள். போயர், தொட்டிய நாயக்கர் மற்றும் எங்கள் சமுதாயத்தினரை விசாரித்தார்கள். தொட்டிய நாயக்கர் சமுதாயத்தினரை விசாரிக்கவில்லை என்றாலும் போயர் மற்றும் எங்கள் சமுதாயத்தினரை மட்டும்தான் விசாரித்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஊர்ப்பிரச்சனையாக எங்கள் தனிப்பட்ட பிரச்சனை மாற்றப்பட்டது என்று தாசில்தார் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவில் புகாரில் குறிப்பிட்டுள்ள எந்தவொரு பிரச்சனையும் உண்மையில்லை என்பதால் இருதரப்பினரிடமும் முச்சலிகாவில் கையொப்பம் இடச் சொல்லி விசாரணையை முடித்தார் என்றால் சரியல்ல. அதிகாரிகள் மூலமாக பிரச்சனை எழுப்ப முடியாததால் நேரடியாக 1ம் பிரதிவாதி பிரச்சனை செய்ததாக கூறும் நிலையில் அதைக் குறித்து புகார் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தாரிடம் மனு தாக்கல் செய்தோம், அந்த மனுக்களை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு தாக்கல் செய்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பிரச்சனை செய்ததாகப் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) 1ம் பிரதிவாதி அவருக்குப் பிடித்த சிலையை நிறுவ முயன்றதாக புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக சிலையை நிறுவ முயன்றதாகப் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் செயல் சட்டவிரோதமானது என்று எதைக் குறிப்பிடுகிறேன் என்றால் பிரதிவாதிகள் சிலை நிறுவ முயன்றது மற்றும் நிர்வாகத்திற்கு எதிராகச் செயல்பட்டதாகும். கோவில் நிர்வாகத்தில் தலையிட பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்று வழக்கிற்காகப் பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10) எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 21ல் ரிட் மனுவில் நாங்கள் கோரியுள்ளபடி உத்தரவு வழங்கப்பட்டது என்று வழக்கிற்காகப் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு எதிராக பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்துவதற்காக நாங்கள் தாக்கல் செய்த ரிட் மனு அனுமதிக்கப்பட்டது. நான் கூறுவது போல் உத்தரவிடப்படவில்லை என்றாலும் இருதரப்பினரையும் காவல்துறையினர் விசாரித்து தக்க உத்தரவினைப் பிறப்பிக்குமாறு காவல் பாதுகாப்பு கொடுக்குமாறும் தான் ரிட் மனுக்களில் உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல, கும்பாபிஷேகம் நடத்துவதற்காக காவல் துறையினரிடம் பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டனர்.

11) நாங்கள் நிர்வாகஸ்தர்கள் இல்லையென்றாலும் நிர்வாகஸ்தர்கள் என்ற முறையில் கோவிலுக்கு வரும் யாரொருவரும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் முறைப்படுத்தும் பொருட்டு

நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்று வழக்கிற்காகப் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருடாவருடம் அமைதிக்கூட்டம் போட்டு முச்சலிகா கையெழுத்து செய்யப்படும் என்றால் சரியல்ல, இதுவரையில் சுமார் இரண்டு மூன்று முறைகள் தான் நடைபெற்றது. எந்தெந்த ஆண்டுகள் நடைபெற்றது என்றால் 2014, 2015, 2016 ஆகிய ஆண்டுகளில் இருக்கலாம், சரியாக ஞாபகமில்லை. மேற்படி ஆண்டுகளுக்குப் பின்னிட்டும் அமைதிக் கூட்டம் நடைபெற்றது என்றால் சரியல்ல. தாவா சொத்து நிர்வாக சுவாதீன உரிமை எங்களுக்கு உரிமையானது அல்ல என்றாலும் கோவில் பொதுக் கோவில் என்றாலும் ரங்கனூர் மக்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**